**அசல் வழக்கு எண்: 364/2022**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 2nd day of September 2025
வா.சா.2. இல்லியாஸ்பாஷா, த/பெ. சம்சுதீன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கொம்மநந்தல் கிராமத்தை சேர்ந்தவர். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதி என்னுடைய சகோதரி ஆவார். இந்த வழக்கு பிரதிவாதி மூர்த்தி அவரை தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி மூர்த்தி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே எனது நண்பர் ஆவார். நான் மூர்த்தியிடம் சீட்டு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். வாதியும் மூர்த்தியிடம் சீட்டு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அஸ்கர் அலி எனது அக்கா மகன் ஆவார். அஸ்கர் அலியும் மூர்த்தியிடம் சீட்டு போட்டுள்ளார் என்றால் சரிதான். அஸ்கர் அலியும் பிரதிவாதி மூர்த்தியும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். அஸ்கர் அலிக்கு சீட்டு பணம் பாக்கி மூர்த்தி தர வேண்டியது உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் மூர்த்தியிடம் மாத சீட்டு தவறாமல் கட்டி வருகிறேன் என்றால் சரிதான். அஸ்கர் அலி தனது தவணை தொகையை தவறாமல் செலுத்தி வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. இந்த வா.சா.ஆ.1 அடமமான கடன் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட அஸ்கர் அலி என்னை அழைத்தார். இந்த வழக்கு வாதியோ பிரதிவாதியோ என்னை அழைக்கவில்லை என்றால் சரிதான். நான் டயர் கடை வைத்துள்ளேன். அஸ்கர் அலி அழைத்ததன் பேரில் தான் நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்றேன் என்றால் சரிதான். நான் ஏலச்சீட்டு எடுத்துவிட்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தில் பாபு முதலில் சாட்சி கையெழுத்து செய்தார். பாபுவை சாட்சி கையெழுத்து போட நான் கூட்டி வந்தேனா என்றால் இல்லை. அடமான சொத்து எங்கு உள்ளது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அடமான கடன் பத்திரம் யார் யாருக்கு எழுதி கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அடமான தொகை ரூ.3,00,000/– ஆகும். நான் சார் பதிவாளர் முன்னிலையில் வா.சா.ஆ.1ல் சாட்சி கையெழுத்து செய்தேன். சார்பதிவாளர் தரப்பினர் அடமான பத்திரம் பதிவு செய்கிறார்கள் அதில் சாட்சியாக கையெழுத்து செய்ய விருப்பமா என்று கேட்டார் நான் சாட்சி கையெழுத்து செய்கிறேன் என்று சொன்னேன். அடமான கடன் தொகையை வாதி பிரதிவாதியிடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தாரா என்றால் வீட்டில் வைத்து கொடுத்தார். பிரதிவாதி பதிவு செய்வதற்கு முன்னர் அவர் பெயரில் உள்ள பத்திரத்தை 10.10.2012ம் தேதி கொடுத்தார். நான் பார்த்தேன். கடன் தொகையை வாதி ரூ.500 நோட்டு கட்டுகளாக கொடுத்தார். பிரதிவாதி பெயரில் உள்ள பத்திரத்தின் தேதி தெரியுமா என்றால் தெரியாது. அஸ்கர் அலிக்கு பிரதிவாதி பாக்கி தொகை கொடுக்க வேண்டியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் இந்த

வழக்கில் எனது சகோதரிக்கு சாதகமாக பொய்யாக வாக்குமூலம் கொடுக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |